# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)


0111

## தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள்

கிழமை (33)

22/8/86

இன்று காலை 11மணியளவில் பருத்தித்துறை கற்கோவளக்கடற்கரையில் கடற்படையினர் தரையிறங்க முற்பட்டபோது விடுதலைப்புலிகள் அவர்கள்மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இதனையடுத்து கடற்படையினர் பின்வாங்கினர்.

23/8/86

தமிழ், முஸ்லீம் கலவரத்தின்போது 400 வீடுகள், 100 மீன்பிடிப்படகுகள், 50 கடைகள், 6 அரிசி ஆலை என்பனவும், 12பேர் படுகொலையும் செய்யப்பட்டும் உள்ளனர்.. இவர்களில் 8 தமிழர் 4 முஸ்லீம்கள்.

மட்டக்களப்பு இருதயபுரத்தில் 12வயதிற்கு மேற்பட்ட 500 இளைஞர்களை இராணுவம் கைது செய்து கொண்டு சென்றுள்ளது.

24/8/86

ஏறாவூர் பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளின் கொரில்லா அணிகளால் தாக்கப்பட்டது. இத்தாக்குதல் பற்றிய சேத விபரம் தெரியவில்லை.

25/8/86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர், மொறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி, கொம்மாதுறை, கரடியனாறு, ஆகிய கிராமங்கள் மீது இனவெறித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதைத்தொடர்ந்து எமது வீரர்கள் பதில்தாக்குதலுக்காக விரைந்து அவ்விடங்கள் சென்றனர். இதனை அறிந்த இராணுவம் முகாம்களை விட்டு வெளியேறவில்லை. எனினும் ஏறாவூரிலும், மொறக்கொட்டாஞ்சேனையிலும் வெளியேறிய இராணுவத்தினர் எம்மவர்களின் தாக்குதல்கட்கு இலக்காகி பாரிய சேதங்களுடன் பின்வாங்கினர்.

இன்று காலை 7மணியளவில் கிளிநொச்சி முகாமிலிருந்து 200ற்கும் மேற்பட்ட இராணுவம் 13 வாகனங்களில் டிப்போ ரோட்டினூடாகவும் ஏனையோர் திருக்கோயில், கணேசபுரம் ஊடாகவும் முன்னேற முற்பட்டனர். இவர்களை இம் மூன்று இடங்களிலும் எம்மவர்கள் மூர்க்கமான முறியடிப்புத்தாக்குதலால் வழிமறித்தனர். இதில் இராணுவத்தினர் பலவித நவீனரக ஆயுதங்களையும் பாவித்தனர். இவர்களுக்கு உதவியாக குண்டுவீச்சு விமானமும் ஹெலிகொப்டர்களும் தாக்குதலில் ஈடுபட்டன. காலை 8 மணிமுதல் 11 மணிவரை நடந்த இத் தாக்குதலில் 6இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 12பேர் படுகாயம் அடைந்தனர், பின்வாங்கிச்சென்ற இராணுவம் நாதன், மணி ஆகிய இரு பொதுமக்களைக் கொன்றுள்ளது. இந்திராணி என்ற மாதும் மோட்டார் தாக்குதலுக்கு இலக்கானார். இத்தாக்குதலில் 4, 203 ரக, 2 ஜே.ஆர் ரக கிரனேட்டுக்களும், ஒரு ர்-56ரக றைபிள், ஒரு ஆர்.பி.ஜீ. ஏ, கே றவைகள் உட்பட பல ஆயுதங்கள் எம்மவர்களால் கைப்பற்றப்பட்டன.

இன்றுகாலை 3 மணியளவில் வவுனியா மாவ

26/8/86

வந்தாறுமூலையில் உள்ள சந்திக்கருகே 'சென்றி' பார்ப்பதற்காகச்சென்ற எமது வீரரான ராமு என்பவர் எதிர்பாராத விதமாக அங்கேவந்த 'கொமாண்டோப்பொலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இன்று மட்டக்களப்பு கிரான்குளத்தடியில் நடந்துவந்த கொமாண்டோப்பொலீஸ்மீது புலிகள் கிளைமோர் கொண்டு தாக்கியதில் 4 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

VOICE OF LIBERATION TIGERS

தொலைபேசி இல. 01-475 0543

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

27/8/86

இன்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி மாங்குளம் நோக்கிச் சென்ற இராணுவத்தினரை அழைத்துச் செல்வதற்கு மாங்குளத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் கால் நடையாக வந்தனர். இவர்களை பனிச்சங்குளம் என்னுமிடத்தில் வைத்து எம்மவர்கள் தாக்கியதில் மூவர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

சமாதானப் பேச்சில் கூட்டணிக்குள்ளிருக்குள் கருத்து வேறுபாடு, பெயர் குறிப்பிட விரும்பாத அக் குழுவின் ஓர் உறுப்பினர் தானும் வேறு சிலரும் அடிப்படைக்கோரிக்கையான "தமிழ் மொழி வாரிய" மானிலம் தொடர்பான முடிவு வரும்வரை பேச்சில் தொடர வேண்டும் என்றும் இவ்வடிப்படைப்பிரச் சனையில் தீர்வு இல்லாமல் இந்தியா திரும்புவதில் என்ன பிரயோசனம்? என்றும் வினாவியுள்ளதாகவும் அவர் கூறினார். ஆனால் கூட்டணிச் செயலதிபர் "எதிர் வரும் சனிக்கிழமை "தாம் இந்தியா திரும்பும்" என அறிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினர் 9ம் கட்டைச் சந்தியில் ஒரு அப்பாவித்தமிழரைச் சுட்டுக்கொன்றதையறிந்த புலிகள் அங்கு விரைந்து சென்று ஆர்.பீ.ஜி. கொண்டு தாக்கியதில் அச்சமடைந்த இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கினர்.

இன்று வாழைச்சேனைக் கொமாண்டோப்பொலிஸ் மீது எம்மவர்கள் 'கிரனைட்' வீசியதில் ஒருவர் கொல்லப்பட்டார் ஒருவர் பலத்த காயத்திற்கு உள்ளானார்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 4000 ற்கும் அதிகமான மக்கள் யாழ் கோட்டை இராணுவமுகாமை மூடிவிடுமாறு கோரி அமைதியான ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

**SOLT (U.K.)**
211 KATHERINE ROAD, EAST HAM
LONDON E6 1BU
TEL: 475 0356

**SOLT (U.K.)**
211 KATHERINE ROAD, EAST HAM
LONDON E6 1BU
TEL: 475 0356

விடுதலைப் புலிகள் தமிழீழ
Liberation Tigers Of
TAMIL EELAM

**SOLT (U.K.)**
211 KATHERINE ROAD, EAST HAM
LONDON E6 1BU
TEL: 475 0356





புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்